திமுக, ஆம் ஆத்மி கட்சிகள் புறக்கணிப்பு... முதல் பக்க தொடர்ச்சி

பரபரப்பை ஏற்படுத்தின. திமுக இளைஞரணி தலைவர் உதயநிதி, மேற்கு வங்க முன்னாள் முதல்வர் மம்தா பானர்ஜி, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால், பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் உள்ளிட்டவர்களின் புகைப்படங்களுடன் ராகுல் காந்தி பற்றி அவர்கள் கூறியதாக சில வாசகங்கள் அந்த போஸ்டர்களில் அச்சிடப்பட்டிருந்தன. “20 ஆண்டுக்கும் மேலாக காங்கிரஸ் நம்மை சார்ந்து வளர்ந்து வந்தது. ஆனால் இன்று அவர்கள் நம்மை முதுகில் குத்திவிட்டார்கள்'' என உதயநிதி கூறியதாகவும், “காங்கிரஸ் கட்சி அதன் நம்பகத்தன்மையை இழந்து வருகிறது. எனவே நாம் காங்கிரஸ் கட்சியை சார்ந்து இருக்க முடியாது'' என மம்தா பானர்ஜி கூறியது போலவும், “ராகுல் காந்தியிடம் நிலைத்தன்மை இல்லை'' என சரத்பவார் கூறியதாகவும், “நாம் காங்கிரஸ் கட்சியை பலவீனப்படுத்த வேண்டாம், அந்த வேலையை ராகுல் காந்தியே மிகவும் சிறப்பாக செய்கிறார்'' என கெஜ்ரிவால் கூறியதாகவும் அச்சிடப்பட்ட போஸ்டர்கள் டெல்லி வீதிகளில் வைக்கப்பட்டிருந்தது பரபரப்பை ஏற்படுத்தியது. இது இந்தியா கூட்டணிக்குள் ஒற்றுமை இல்லாததை வெளிப்படுத்தும் விதமாக இருந்தது.

இந்நிலையில், இந்தியா கூட்டணி கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் திட்டமிட்டபடி டெல்லி கான்ஸ்டிடியூஷன் கிளப்பில் நேற்று நண்பகல் 12 மணிக்கு தொடங்கியது. இக்கூட்டத்தை திமுக, ஆம் ஆத்மி கட்சிகள் புறக்கணித்தன. கடும் அதிருப்தியுடன் மார்க்சிஸ்ட், ஜார்க்கண்ட் முக்திமோர்ச்சா உள்ளிட்ட கட்சிகள் பங்கேற்றன. மொத்தம் 25 கட்சிகளின் தலைவர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றதாகவும், சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே, ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சி தலைவர் ஹேமந்த்சோரன் இருவரும் வீடியோ கான்பரன்ஸ் மூலம் பங்கேற்றதாகவும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார். 2024 மக்களவை தேர்தலுக்கு பிறகு நீண்ட இடைவெளிக்குபின் நடந்த இக்கூட்டத்தில், காங்கிரசின் சோனியா காந்தி, ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கே, திரிணாமுல் காங்கிரசின் மம்தா பானர்ஜி, சமாஜ்வாடி கட்சியின் அகிலேஷ் யாதவ், ஆர்ஜேடியின் தேஜஸ்வி யாதவ், தேசிய மாநாட்டு கட்சியின் உமர் அப்துல்லா, பிடிபியின் மெஹபூபா முப்தி மற்றும் இடதுசாரித் தலைவர்கள் பங்கேற்றனர்.

▶ டெல்லியில் நேற்று நடந்த இந்தியா கூட்டணி ஆலோசனை கூட்டத்தில், காங்கிரசின் மல்லிகார்ஜுன கார்கே, சோனியா காந்தி, ராகுல் காந்தி, திரிணாமுல் காங்கிரசின் மம்தா பானர்ஜி, சமாஜ்வாடியின் அகிலேஷ் யாதவ், காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா, தேசியவாத காங்கிரசின் சுப்ரியா சுலே உள்ளிட்டோர்.

ஒற்றுமை உணர்வை வலுப்படுத்த வேண்டும்

இந்தியா கூட்டணி கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, “அரசியலமைப்புச் சட்டத்தின் மீதான தாக்குதல்கள் தொடர்கின்றன. அரசியல் எதிரிகளை அச்சுறுத்தவும் மிரட்டவும் விசாரணை அமைப்புகள் தொடர்ந்து கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஒன்றிய பாஜ அரசின் மோசமான வெளியுறவுக் கொள்கைகளால், நாட்டின் பொருளாதாரச் சூழல் மிகவும் மோசமாக மாறி விட்டது. புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்குத் தேவையான வேகத்தில் புதிய முதலீடுகள் வரவில்லை. லட்சக்கணக்கான இளைஞர்களின் நம்பிக்கைகளையும் லட்சியங்களையும் சிதைத்துவிட்ட தேர்வு முறைகேடுகள் முழுமையான நிர்வாகச் சீர்கேட்டை வெளிச்சம் போட்டு காட்டுகின்றன. எனவே, மோடி அரசின் நிர்வாகச் சீர்கேடு காரணமாக நாடு எதிர்கொள்ளும் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் வெளியுறவுக் கொள்கை சார்ந்த சவால்களை எதிர்கொள்ள எதிர்க்கட்சிகள் ஒற்றுமை உணர்வை வலுப்படுத்த வேண்டும்” என வலியுறுத்தினார். கூட்டணியில் பல கட்சிகளும் அதிருப்தியில் உள்ள நிலையில், மல்லிகார்ஜுன கார்கே இவ்வாறு வலியுறுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.

5 முக்கிய முடிவுகள்

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து செய்தியாளர்களை சந்தித்த காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கூறியதாவது:

இந்தியா கூட்டணி கூட்டத்தில் 25 கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர். அனைவரும் அவர்கள் கருத்தை தெரிவித்தனர். அதன் அடிப்படையில், 5 முக்கிய விவகாரங்களில் ஒருமித்த கருத்தை எட்டி உள்ளோம்.

- நீட், சிபிஎஸ்இ தேர்வு விவகாரத்தில் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டுமென ஒருமனதாக வலியுறுத்தப்பட்டுள்ளது.
- நாட்டின் கவலைக்குரிய தற்போதைய பொருளாதார நிலை, வேலையின்மை, விலைவாசி உயர்வு, விவசாயிகள் மற்றும் ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் பிரச்னைகள் குறித்து விவாதிக்க ஒன்றிய அரசு அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட வேண்டும்.
- இந்தியா கூட்டணி தலைவர்கள் 2 மாதங்களுக்கு ஒருமுறை சந்திக்கவும், அடுத்த கூட்டம் ஆகஸ்ட் மாதம் ஐதராபாத்தில் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான தேதி பின்னர் முடிவு செய்யப்படும்.
- எஸ்ஐஆர், வாக்கு கொள்ளை மற்றும் தேர்தல் முறைகேடுகள் குறித்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்குக் கடிதம் அனுப்ப ஒப்புக்கொள்ளப்பட்டது. அந்தக் கடிதம் விரைவில் தலைமை நீதிபதியிடம் ஒப்படைக்கப்படும்.
- நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரின் போது சுமூகமான ஒருங்கிணைப்பை உறுதி செய்ய இந்தியா கூட்டணி தலைவர்கள் தொடர்ந்து சந்திக்க முடிவு செய்தனர். வழக்கம்போல எதிர்க்கட்சித் தலைவரின் அறையில் அவர்கள் சந்திப்பார்கள்.

இவ்வாறு மல்லிகார்ஜுன கார்கே கூறினார். அவருடன் ராகுல் காந்தி, அகிலேஷ் யாதவ், மம்தா பானர்ஜி மற்றும் கூட்டணியின் பிற மூத்த தலைவர்களும் உடனிருந்தனர்.

இரும்பு குழம்பு கொட்டியது

விசாகப்பட்டினம் உருக்காலையில் 8 தொழிலாளர்கள் உடல் கருகி பலி

திருமலை, ஜூன் 9: விசாகப்பட்டிணம் உருக்காலையில் இரும்பு குழம்பு கொட்டியதில் 8 தொழிலாளர்கள் பலியாகினர். படுகாயமடைந்தவர்களை மீட்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் இரும்பு உருக்கு ஆலை செயல்பட்டு வருகிறது. இங்கு நூற்றுக்கும் மேற்பட்டோர் ஷிப்ட் வாரியாக பணிபுரிந்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று மாலை உருக்காலையில் இரும்பை உருக்கும் பட்டறை-2 பிரிவில் உள்ள எஸ்.டி.சி. 3 வெப்ப உருக்குக் கலனிலிருந்து 1600 டிகிரி வெப்பத்தில் இருந்த இரும்பு குழம்பு திடீரென கொட்டியது. இதில் அங்கு பணியில் ஈடுபட்டிருந்த சுமார் 8 தொழிலாளர்கள் அதே இடத்தில் உடல் கருகி இறந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்தவுடன் உடனடியாக அபாய சங்கு ஊதப்பட்டது. தகவலறிந்த மீட்பு படையினர், போலீசார் மற்றும் அதிகாரிகள் விரைந்து வந்து மீட்பு பணியை தீவிரப்படுத்தினர்.

▶ ஆந்திர மாநிலம் விசாகப்பட்டிணம் இரும்பு உருக்காலை பிரிவில் விபத்து ஏற்பட்ட பகுதியில் நடந்த மீட்பு பணி.

இதுகுறித்து தொழில் துறை அதிகாரிகள் தரப்பினர் கூறுகையில், ‘எஸ்.எம்.எஸ்-2 பிரிவில் கனரக கிரேனின் உதவியுடன் இரும்பு குழம்புடன் கூடிய கொள்கலனை தூக்கியபோது திடீரென தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு உருக்கிய இரும்பு கொட்டியது. 1600 டிகிரிக்கு மேல் வெப்பம் கொண்ட அந்த இரும்பு குழம்பு கீழே கொட்டியதால், அப்பகுதி முழுவதும் தீப்பிடித்தது.

அங்கு பணியில் இருந்த தொழிலாளர்கள் தப்பிக்கும் வாய்ப்பு கிடைக்காததால், உயிர் இழப்புகள் ஏற்பட்டது. உருக்காலையை சேர்ந்த ஏராளமான உள் பேரிடர் மேலாண்மைக் குழுவினர், தீயணைப்பு வீரர்கள் மீட்பு பணியை தீவிரப்படுத்தியுள்ளனர். என தெரிவித்தனர். இருப்பினும் பலியானவர்கள் மற்றும் படுகாயமடைந்தவர்களின் எண்ணிக்கை விவரம் குறித்து அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்படவில்லை. இருப்பினும் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர்.

பலத்த காற்று, மழையால்

டெல்லி விமான நிலையத்தில் இருந்த 3 ஏர் இந்தியா விமானங்கள் சேதம்

புதுடெல்லி, ஜூன் 9: பலத்த காற்று, மழையால் டெல்லி விமான நிலையத்தில் இருந்த 3 ஏர் இந்தியா விமானங்கள் சேதமடைந்தது குறித்து விசாரணை நடந்து வருவதாக டிஜிசிஏ தெரிவித்துள்ளது.

டெல்லியில் கடந்த சில தினங்களாக பலத்த காற்றுடன்கூடியமழைபெய்துவருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் டெல்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையம் டெர்மினல் 2ல் நிறுத்தப்பட்டிருந்த 3 ஏர் இந்தியா ஏ-320 விமானங்கள் நிறுத்தப்பட்டிருந்த இடத்தில் இருந்து நகர்ந்ததால், தரையிறங்கும் உபகரணங்கள் மோதி சேதமடைந்தன. இதனால் விமான சேவைகளில் பாதிப்பு ஏற்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக விமான பாதுகாப்பு ஒழுங்குமுறை ஆணையம் விசாரணை நடத்தி வருகிறது.

காங்கிரஸ் தனது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டும்

இந்தியா கூட்டணி கூட்டத்தில் தொல்.திருமாவளவன் வலியுறுத்தல்

புதுடெல்லி, ஜூன் 9: இந்தியா கூட்டணியின் ஆலோசனைக் கூட்டம் டெல்லியில் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பேசிய விசிக தலைவர் தொல்.திருமாவளவன்,” அண்மையில் நடந்து முடிந்த தேர்தல்களின் போது காங்கிரஸ் கட்சி கையாண்ட அணுகுமுறையால் இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகள் இடையே அதிருப்தி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கேரளம், மேற்குவங்கம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி மேற்கொண்ட அணுகுமுறை இந்த கூட்டணிக்கு உறுதுணையாக இருந்த கட்சிகளான திரிணாமுல், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, திமுக ஆகியவற்றை பலவீனம் அடையச் செய்திருக்கிறது. இது விரும்பத்தக்கது அல்ல. எனவே காங்கிரஸ் கட்சி தனது அணுகுமுறையை மறு ஆய்வு செய்து இந்த ஒற்றுமையை இன்னும் வலுவாக முன்னெடுப்பதற்கான வழிகளை கண்டறிய வேண்டும்.

இந்தியா கூட்டணியில் தேசியக் கட்சிகளும் மாநில கட்சிகளும் ஒன்றாக இணைந்து செயல்பட்டு வருகிறோம். இயல்பாகவே தேசியக் கட்சிகளுக்கும் மாநில கட்சிகளுக்கும் இடையே முரண்களும் இருக்கும். அவற்றை கூர்மைப்படுத்தக்கூடாது. அந்தப் பொறுப்பு மாநில கட்சிகளுக்கும் மட்டுமல்ல தேசிய கட்சிகளுக்கும் உள்ளது என்றார்.

இதைத்தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த மதிமுகவின் பொதுச் செயலாளர் வைகோ,” காங்கிரஸ் தலைமையில் எந்தவிதமான சிறு கருத்து வேறுபாடுகளுக்கும் இடம் கொடுக்காமல் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. எஸ்.ஐ.ஆர் விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிக்கு கடிதம் எழுத முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இதைத்தொடர்ந்து இந்தியா கூட்டணி கூட்டத்தில் திமுக பங்கேற்காதது குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு,” கருத்து தெரிவிக்க வைகோ மறுத்துவிட்டார்.

2029 மக்களவைத் தேர்தலுக்கான

பிரதமர் வேட்பாளரை அறிவிக்க வேண்டும்

இந்தியா கூட்டணிக்கு சஞ்சய் ராவத் அறிவுரை

மும்பை, ஜூன் 9: சிவசேனா (உத்தவ் பிரிவு) மாநிலங்களவை எம்.பி. சஞ்சய் ராவத் கூறுகையில்,’ பாஜவுக்கு எதிரான இந்தியா கூட்டணி ஒற்றுமையுடன் உள்ளது. மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் எம்.பி.யுமான ராகுல் காந்தியின் தலைமையில் இந்தியா கூட்டணி எதிர்கால உத்தியை முடிவு செய்யும். இந்தியா கூட்டணியின் ஒரே நோக்கம், ஊழல்வாதிகள் மற்றும் மக்களைக் கொள்ளையடிப்பவர்களை அதிகாரத்திலிருந்து அகற்றுவதாகவே இருக்க வேண்டும். அதுவே மக்களின் மனதின் குரல் ஆக இருக்கும் ஒற்றை நோக்கமாகவும் அமைய வேண்டும். இந்தியா கூட்டணியின் பிரதமர் வேட்பாளரை முன்னிறுத்தியே நாம் 2029 மக்களவைத் தேர்தலைச் சந்திக்கவேண்டும்.

இதுவே உத்தவ் தாக்கரேவின் நிலைப்பாடாகும். 2024 மகாராஷ்டிரா சட்டப்பேரவைத் தேர்தலில் முதல்வர் வேட்பாளரை அறிவிக்காதது, இந்தியா கூட்டணியின் தேர்தல் வாய்ப்புகளை ஓரளவுக்குப் பாதித்தது. மேற்கு வங்கத் தேர்தலில் தோல்வியைச் சந்தித்த பிறகு எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையின் முக்கியத்துவத்தை திரிணாமுல் காங்கிரஸ் உணர்ந்துகொண்டது. அதேபோல் தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியுடனான உறவை முறித்துக்கொண்ட திமுக, மீண்டும் இந்தியா கூட்டணியில் இணையும் என்றார்.

கருத்து வேறுபாடுகளை தீர்க்க முக்கிய தலைவர்கள் கூட்டம்

இந்தியா கூட்டணியில் நிலவும் கருத்து வேறுபாடுகளை தீர்க்க முக்கிய தலைவர்களின் கூட்டம் விரைவில் நடத்தப்படும் என்று தேசியவாத காங்கிரஸ் சரத் சந்திரபவார் கட்சி தலைவர் சரத்பவார் கூறினார். அவர் கூறுகையில்,’ சமீபத்திய தேர்தல்களில் இந்தியா கூட்டணிக் கட்சிகள் சில இடங்களில் இணைந்து போட்டியிட்டன; சில இடங்களில் தனித்தனியாக போட்டியிட்டன. இத்தகைய சூழ்நிலை உருவாகி வருவதால், அடுத்த 8 முதல் 15 நாட்களுக்குள் கூட்டணியின் முக்கிய தலைவர்களை அழைத்து ஆலோசனை நடத்தி, பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிப்போம். தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. உடனடியாக பொதுத் தேர்தல்கள் எதுவும் நடைபெறவில்லையென்பதால், பிரச்சினையைத் தீர்க்க நேரம் உள்ளது’ என்றார்.

நடிகர் சலீம்குமாரின் இறுதிச்சடங்கில் யூடியூபர்களால் பிரச்னை

தனிநபர் சுதந்திரத்தை பாதிக்கும் வகையில் போட்டோ, வீடியோ எடுத்தால் 3 வருடம் சிறை

திருவனந்தபுரம், ஜூன் 9: பிரபல மலையாள நடிகர் சலீம்குமார் உடல்நலக் குறைவால் கடந்த இரு தினங்களுக்கு முன் மரணமடைந்தார். இவரது இறுதிச்சடங்கின் போது அங்கு ஏராளமான யூடியூபர்கள் குவிந்தனர். இதனால் இறுதிச் சடங்கு நிகழ்ச்சிக்கு பெரும் இடையூறு ஏற்பட்டது. இதனால் கோபமடைந்த சலீம்குமாரின் மகன் நடிகர் சந்து, யூடியூபர்களை அங்கிருந்து வெளியேறுமாறு கூறினார்.

கேரள போலீஸ் எச்சரிக்கை

இந்நிலையில் கேரள போலீசும் யூடியூபர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக கேரள போலீசின் முகநூலில் கூறியிருப்பது: ஒரு தனிநபரின் சுதந்திரத்தை பாதிக்கும் வகையில் அவருடைய அனுமதி இல்லாமல் வீடியோவோ, போட்டோவோ எடுத்து அதை வெளியிடுவது தகவல் உரிமை சட்டம் 2000 பிரிவு 66 இ யின் படி குற்றமாகும். இந்த செயலில் ஈடுபட்டால் 3 வருடம் வரை சிறையும், ரூ. 2 லட்சம் அபராதமும் விதிக்கப்படும். இவ்வாறு கேரள போலீசின் முகநூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக டவுன் பஸ்களில் அமல்

கேரளத்தில் 15ம் தேதி முதல் அரசு பஸ்களில் பெண்களுக்கு இலவச பயணம்

திருவனந்தபுரம், ஜூன் 9: கேரளத்தில் சமீபத்தில் நடந்த சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றியது. காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் அரசு பஸ்களில் பெண்களுக்கு இலவச பயணத் திட்டம் அமல்படுத்தப்படும் என்று காங்கிரஸ் வாக்குறுதி அளித்திருந்தது. இந்த நிலையில் நேற்று முதல்வர் வி.டி.சதீசன் தலைமையில் போக்குவரத்துதுறை அமைச்சர் சி.பி. ஜான் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பின் அமைச்சர் சி.பி. ஜான் கூறியது: கேரளத்தில் வரும் 15ம் தேதி முதல் அரசு பஸ்களில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யலாம். முதல் கட்டமாக டவுன் பஸ்களில் மட்டுமே பயணம் செய்ய முடியும். இதன் மூலம் அரசு போக்குவரத்து கழகத்திற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படும் என்பது குறித்து ஆய்வு செய்யப்படும். இதன் பிறகு அடுத்த கட்டத்தில் விரைவு பஸ்களிலும் இலவச பயணத்திட்டத்தை அமல்படுத்த முடியுமா என்பது குறித்து ஆலோசிக்கப்படும். திருநங்கைகளும் இலவச பயணம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

ஆக்ஸிஸ் வங்கி லிமிடெட்
(CIN: L65110GJ1993PLC020769)

Structured Assets Group: 1வது தளம், ஆக்ஸிஸ் ஹவுஸ், எண்.3, கிளப் ஹவுஸ் ரோடு, அண்ணா சாலை, சென்னை - 600002. www.axisbank.com

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான அறிவிப்பு

2002ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் விதி 8(6)-ன் கீழ் வங்கியிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் விற்பனை.

ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட் நிறுவனத்தில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை, ஈடுபெற்று கடன் வழங்கியவரான ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனத்தில் (possession) எடுக்கப்பட்டு (குற்றவியல் மனு எண்.13547/2025-இல் மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, அட்டவணை சொத்து எண்.1-இன் சுவாதீன தேதி **10.03.2026** மற்றும் குற்றவியல் மனு எண்.5726/2025-இல் மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, அட்டவணை சொத்து எண்.2-இன் சுவாதீன தேதி **30.12.2025**) கீழே குறிப்பிட்ட **கடன்தாரர்கள் / அடமானதாரர்களான 1)M/s.கல்பேஷ் ஸ்டீல் ஹவுஸ், 2)Mr.அம்ரித் டோகர்சி ஜோஷி, 3)Mr.கல்பேஷ் அம்ரித் ஜோஷி, 4)Mr/Mrs.சந்தா அம்ரித் ஜோஷி & 5) Mr.பவின் அம்ரித் ஜோஷி** வசூலிக்கப்பட வேண்டிய கடன்தொகையான **31.03.2026** அன்றுள்ளபடி **₹ 9,25,24,066.88** (ரூபாய் ஒன்பது கோடியே இருபத்து ஐந்து லட்சத்து இருபத்து நான்காயிரத்து அறுபத்து ஆறு மற்றும் பைசா எண்பத்து எட்டு மட்டும்) மற்றும் **01.04.2026** முதல் திரும்ப செலுத்தும் காலம் வரை ஒப்புக் கொள்ளப்பட்ட விகிதத்தில் வட்டி, இதர செலவுகளுடன் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **“உள்ள இடத்தில் உள்ளவாறு” “உள்ளது உள்ளவாறு” மற்றும் “எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே” மற்றும் “பின் தொடர்ச்சியாக வங்கியின் உதவியை நாடமுடியாது”**என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

அசையா சொத்துக்கள் விவரம்

கடன்தாரர் பெயர்: M/s.கல்பேஷ் ஸ்டீல் ஹவுஸ்.

சொத்து எண்.1 : லாட் எண்.1: ஷெட்யூல்-A: நிலம் அதிலுள்ள கட்டிடம் மற்றும் மேம்பாடுகள், பொருத்தப்பட்டுள்ளவைகள், அதனுடன் அனைத்து இயந்திர தளவாடங்கள், பூமியுடன் இணைக்கப்பட்டுள்ள அல்லது நிகழ்காலத்திலும் மற்றும் எதிர்காலத்திலும் பூமியுடன் இணைக்கப்பட்ட எதனுடனும் நிரந்தமாக இணைக்கப்பட்டுள்ளவைகள்.

மத்திய சென்னை பதிவு மாவட்டம், புரசைவாக்கம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட பிரிக்லின் ரோடு, புரசைவாக்கம் கிராமம் (முன்னர் செம்மாம்பேட்டை, ஓட்டேரி) புரசைவாக்கம், சென்னை சர்வே எண்.3059, 3060, 3061 மற்றும் 3062 (தற்போது 3062/1, 3062/2, 3062/3, 3062/4 & 3062/5 பகுதிகள்)-ல் பரப்பு 78 கிரவுண்ட் மற்றும் 143 சதுர அடி, சர்வே எண்.3062/1 (3062/1, 3062/4 & 3062/5 Parts)-ல் பரப்பு 7808 சதுர அடி, சர்வே எண்.3072-ல் பரப்பு 6 கிரவுண்ட் மற்றும் 856 சதுர அடி, சர்வே எண்.3069-ல் பரப்பு 11 கிரவுண்ட் மற்றும் 670 சதுர அடி, சர்வே எண்.3070-ல் பரப்பு 11 கிரவுண்ட் மற்றும் 2244 சதுர அடி, சர்வே எண்.3091/1 மற்றும் 3075/1-ல் பரப்பு 13 கிரவுண்ட் மற்றும் 1161 சதுர அடி, சர்வே எண்.3076 பகுதியில் பரப்பு 3 கிரவுண்ட் மற்றும் 2279 சதுர அடி, சர்வே எண்.3075/2-ல் பரப்பு 2 கிரவுண்ட் மற்றும் 1184 சதுர அடி, சர்வே எண்.3091/2-ல் பரப்பு 7 கிரவுண்ட் மற்றும் 45 சதுர அடி, சர்வே எண்.3071-ல் பரப்பு 6 கிரவுண்ட் மற்றும் 452 சதுர அடி, சர்வே எண்.3073-ல் பரப்பு 8 கிரவுண்ட் மற்றும் 71 சதுர அடி, சர்வே எண்.3074-ல் பரப்பு 7 கிரவுண்ட் மற்றும் 1609 சதுர அடி ஆகமொத்தம் 159 கிரவுண்ட் மற்றும் 1720 சதுர அடி (பட்டா படி 159 கிரவுண்ட் மற்றும் 1821 சதுர அடி) நிலம், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: சர்வே எண்கள். 3068,3084,3083,3082,3081,3079,3078,3077 & 3090, தெற்கு: புரசைவாக்கம் நெடுஞ்சாலையை இணைக்கும் 20 அடி ரோடு, கிழக்கு: பிரிக்லின் ரோடு மற்றும் சர்வே எண்கள்.3090,3092,3093 & 3058, மேற்கு: சர்வே எண்கள்.3045, 3063 & 3068.

ஷெட்யூல்-B (OSR -க்கு தானமாக கொடுக்கப்பட்ட பிறகு மேம்பாட்டுக்கான சொத்து) புரசைவாக்கம் கிராமம் (முன்னர் செம்மாம்பேட்டை, ஓட்டேரி) பிரிக்லின் ரோடு, புரசைவாக்கம், சென்னை-ல் உள்ள 143 கிரவுண்ட் மற்றும் 1668 சதுர அடி நிலம், அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும்.

ஷெட்யூல்– C : மேற்கண்ட ஷெட்யூல் B சொத்தில் 787 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம்.

ஷெட்யூல் – D: ஷெட்யூல் B சொத்தில் கட்டப்பட்டுள்ள ப்ளாட் எண்.5111, பதினோறாவது தளம், 5வது பிளாக், " TVH LUMBINI SQUAREE" என அழைக்கப்படும் பல அடுக்கு மாடி கட்டிட காம்ப்ளெக்ஸ்-ல் 2426 சதுர அடி அல்லது அதற்கு ஏறக்குறைய குடியிருப்பு ப்ளாட் அதனுடன் அடித்தளத்தில் ஒரு மூடிய கார் பார்க்கிங் இடம் உட்பட.

குறைந்தபட்ச கேட்பு விலை : ₹ 4,05,00,000/-
(ரூபாய் நான்கு கோடியே ஐந்து லட்சம் மட்டும்)

டேவணித்தொகை (EMD): ₹ 40,50,000/-
(ரூபாய் நாற்பது லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)

ஏல உயர்வுத்தொகை : ₹ 1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) (Auction ID: 367679)

சொத்து எண்.2 : லாட் எண்.2: வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் திருவொற்றியூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.288/1 பகுதி, பட்டா எண்.605, துவாரகா நகர், சடையான்குப்பம் கிராமம், சைதாப்பேட்டை தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம் தற்போது திருவொற்றியூர் தாலுகா, சென்னை மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள 55.39 சென்ட் காலி நிலம், 6-J என்ற எழுத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: 20 அடி ரோடு, தெற்கு: 6-M எழுத்தில் உள்ள நிலம் மற்றும் R.S.எண்.288/2, கிழக்கு: R.S.எண்.288/2, மேற்கு: 6-K எழுத்தில் உள்ள நிலம்.

குறைந்தபட்ச கேட்பு விலை : ₹ 3,98,00,000/-
(ரூபாய் மூன்று கோடியே தொண்ணூற்று எட்டு லட்சம் மட்டும்)

டேவணித்தொகை (EMD): ₹ 39,80,000/-
(ரூபாய் முப்பத்து ஒன்பது லட்சத்து எண்பதாயிரம் மட்டும்)

ஏல உயர்வுத்தொகை : ₹ 1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) (Auction ID: 367682)

சென்னையில் மாண்புமிகு தலைமை பெருநகர மாஜிஸ்திரேட் அவர்களால் குற்றவியல் மனு எண் 13547/2025-இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, சொத்து எண் 1 ஐட்டம் எண் 1, 10.03.2026 அன்று கையகப்படுத்தப்பட்டும், திருவள்ளூரில் மாண்புமிகு தலைமை நீதித்துறை மாஜிஸ்திரேட் அவர்களால் குற்றவியல் மனு எண் 5726/2025-இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து எண்.2 ஐட்டம் எண் 2-இன் சுவாதீனம் 30.12.2025 அன்று கையகப்படுத்தப்பட்டு, அதன் உடைமை ஆக்சிஸ் வங்கி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டும் உள்ளது.

இ-ஏல தேதி மற்றும் நேரம்: 10.07.2026
ஐட்டம் எண்.1: காலை 11.00 மணி முதல் 11.15 மணி வரை
ஐட்டம் எண்.2: காலை 11.15 மணி முதல் 11.30 மணி வரை
கடைசி ஐந்து நிமிடங்கள் வரை தலா ஐந்து நிமிடங்கள் கொண்ட நீட்டிப்புகள் அனுமதிக்கப்படும்

விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்க வேண்டிய கடைசி தேதி மற்றும் EMD செலுத்தும் முறை

ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட் என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்க டிமாண்ட் டிராப்ட் / பே ஆர்டர் வடிவில் **09.07.2026 அன்றோ அதற்கு முன்னரோ மாலை 5.00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டிய முகவரி** பின்வருமாறு: சென்னை – **Mr.Moorthy.K, + 91 97100 06661**, ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட், 1வது தளம், ஆக்ஸிஸ் ஹவுஸ், எண்.3, கிளப் ஹவுஸ் ரோடு, அண்ணா சாலை, சென்னை - 600 002.

சொத்தினை பார்வையிடுதல்

தொடர்புக்கு: **Mr.Moorthy.K** (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி) Mob: **+91 97100 06661**
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் முன் அனுமதி பெற்று வேலை நாட்களில் சொத்தினை பார்வையிடலாம்.

ஈடுபெற்று கடன் கொடுத்த வங்கிக்கு தெரிந்த வில்லங்கம் : இல்லை

விற்பனையின் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும். **https://www.axisbank.com/auction-notices and / or https://axisbank.auctiontiger.net (Lot-1- Auction ID: 367679), (Lot- 2 - Auction ID: 367682).**

தேதி: 09.06.2026
இடம்: சென்னை

Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஆக்ஸிஸ் பேங்க்

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலகு: முதல் தளம், எண்.86/11, ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை-600 015

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 25.06.2026 தேதியன்று மின்-ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்-ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1	கடன் எண்: HF0028H21100146 சங்கர் நாராயணசாமி (கடன்தாரர்), கௌரி சங்கர் (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 10.05.2025 மொத்த நிலுவைத் தொகை: 10.05.2025 தேதியின்படி ரூ.21,98,557/-(ரூபாய் இருபத்து ஒரு லட்சத்து தொன்னூற்று எட்டாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்தேழு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான ஆண்டொன்றுக்கு 15.6% வட்டி கூடுதலாக.	கையக	மனை எண்.5A, மார்ஸ் நகர், வேப்பம்பட்டு கிராமம், திருவள்ளூர் வட்டம் மற்றும் மாவட்டம், S.No.102/2, பட்டா எண்.146, புதிய பட்டா எண்.242, பட்டாவின்படி புதிய துணைப் பிரிவு S.No.102/2C இல் உள்ள 795 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. LP/DTCP அனுமதி எண்.84/31 இன்படி நிலத்தில் கட்டப்பட்டுள்ள அனைத்து வசதிகளும் கொண்ட கட்டிடம் உள்ள சொத்து. நிலத்தின் எல்லைகள்: வடக்கில்: 30 அடி சாலை, , தெற்கில்: S.No.101, கிழக்கில்: மனை எண்.5, மேற்கில்: காலி நிலம். திருவள்ளூர் பதிவு மாவட்டம், திருவள்ளூர் இணை I சார் பதிவு அலுவலகத்தில் அமைந்துள்ள சொத்து.	Rs. 1700000.00/- (ரூபாய் பதினேழு லட்சம் மட்டும்)	Rs. 170000.00/- (ரூபாய் ஒரு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்)	24-06-2026 Before 5 PM	10,000/-	15-06-2026 (11AM – 4PM)	25-06-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்-ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா-122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்-ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக **க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரஸீட்ஸ்** A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code- ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பான்ஞ்ச்சில் டெக்னிகல் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்-411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 24.06.2026 தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்-ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை **முதல் தளம், எண்.86/11, ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை-600015**, கைபேசி எண். **+91 9597907666**, மின்னஞ்சல் முகவரி baskaran.soundarrajan@grihumhousing.com இல் தொடர்பு கொள்ள வேண்டும். மின்-ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com- ஐ பார்வையிடவும். கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்-2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப - கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாட்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்திதாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 09.06.2026, இடம்: தமிழ்நாடு

ஓம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்